15.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.375/2021

அ.சா.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துகிருஷ்ணன் | | |
| த/பெ | கார்த்திபன் | மதம் | |
| கிராமம் | பக்கிரிபாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 31/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் பக்கிரிபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பனை எனக்கு தெரியும். இந்த வழக்கில் அ.சா.1 நதியா, அ.சா.2 கோபாலகிருஷ்ணன,அ.சா.6 இளையராஜா ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். அய்யப்பன் கடந்த 25.4.2021 அன்று எதிரிகள் அடித்ததில் அன்று மருத்துவமனையில் சேர்த்து அன்று இரவே இறந்துவிட்டார். அய்யப்பன் என்பவர் எனக்கு மாமா ஆவார். 22.4.2021 அன்றே எதிரிகளுக்கும் எனது மாமாவிற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு, எனது மாமா சரவணன் மனைவியை அடித்துவிட்டார். அதற்கு பிறகு அய்யப்பனுக்கும் அவரது மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டு அவரது மனைவி பண்டகசோழகநல்லூர்க்கு சென்றுவிட்டார். அதன் பிறகு எனது மாமா அய்யப்பனும் ஊரில் இல்லை. நாங்களும் விசயம் தெரிந்து எனது மாமாவை தேட ஆரம்பித்தோம். அவர் எங்கே உள்ளார் என்று எனக்கு தெரியவில்லை. அடிப்பட்டவர்களும் காவல்துறையில் புகார் கொடுத்ததாக சொன்னார்கள். திடிரென ஞாயிற்று கிழமை மதியம் கோபாலகிருஷ்ணன் எனக்கு போன் செய்து திருக்கனூர் ஏரிக்கரையில் மாமாவை எதிரிகள் பிடித்து கொண்டு வந்து சொந்த ஊரில் வைத்து

பயங்கரமாக அடித்ததாகவும், தடுக்க போனதற்கு தன்னையும் அடிக்க வந்ததாகவும் சொன்னார். நான் இதை கேள்விப்பட்டவுடன் வண்டியை எடுத்துக்கொண்டு சிவபெருமான்பாளையத்திற்கு சென்றேன். நான் சென்ற போது என் மாமா சம்பவ இடத்தில் ரத்த வெள்ளத்தில் ஜட்டியோடு படுத்திருந்தார். தலை முழுவதும் பலத்த ரத்தக்காயங்கள் இருந்தது. அதை பார்த்தவுடன் நான் எதிரிகளிடம் எனது மாமா அய்யப்பன் செய்தது தவறு தான். அதற்காக அவரை அடித்துவிட்டீர்கள். ஆனால் அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து செல்லவிடுங்கள் என்றும் ஏற்கனவே புகார் கொடுக்கப்பட்டுள்ளது. சிகிச்சை முடிந்தவுடன் காவல்துறையிடம் ஒப்படைக்கிறோம் என்று கேட்டததற்கு அவர்கள் தவறான வார்த்தை சொல்லி ஒரு மணி நேரமாக அவரை அனுப்பவேயில்லை. அப்போது 4ம் எதிரி அவரது தலையில் மண்ணை வாரி வைத்துவிட்டார். இந்த சம்பவத்திற்கு பிறகு அய்யப்பனின் மனைவி நதியாவும் அங்கு வந்து தனது கணவர் செய்தது தவறு தான். அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல அனுமதியுங்கள் என்று கேட்டதற்கு அதற்கும் அவர்கள் அனுமதிக்கவில்லை. அதன் பிறகு விக்கரவாண்டி காவல்நிலையத்தில் இருந்து காவலர்கள் வந்துவிட்டனர். ஆம்புலன்ஸ்ம் உடனடியாக வந்துவிட்டது. காவலர்கள் 5 அல்லது 10 நிமிடங்கள் வாக்குவாதம் செய்தபிறகு தான் அய்யப்பனை ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள். அவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அங்கேயே காவல்துறையினர் வந்து என்ன நடந்தது என்று எங்களிடம் விசாரித்தார்கள். அவர்களே விசாரித்து புகாரை எடுத்துக்கொண்டார்கள். அதன் பிறகு அவரை சிகிச்சைக்கு அனுமதித்து அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளித்தனர். அன்று இரவு 1 மணிக்கு அய்யப்பன் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அய்யப்பன் எனது மாமா உறவு. அவர் எனது சின்ன ஆயா மகன் ஆவார். 22.4.2021 தேதியில் சரவணன் மனைவிக்கும் அய்யப்பனுக்கும் சண்டை நடந்ததாக பிரியா என்னிடம் சொன்னார். அவர் என் சின்ன ஆயாவின் பேத்தி ஆவார். பிரியாவின் அம்மா பெயர் மலர். அப்பா பெயர் துரை. பிரியா 22.4.2021 தேதி சம்பவம் குறித்து

காலை 12 மணிக்குள் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அன்று சிவபெருமான்பாயைத்திற்கு சம்பவத்திற்காக நான் வந்தேனா என்றால் இல்லை. அய்யப்பனுக்கும் அவரது மனைவி நதியாவுக்கும் இடையே சரவணன் மனைவியை அடிப்பதற்கு முன்பாகவே சண்டை இருந்தது. எனவே அவர் சண்டை ஏற்பட்டு தாயார் வீடான பண்டசோழநல்லுருக்கு சென்றுவிட்டார். அய்யப்பனை நான் 23.4.2021 தேதி முதல் நாங்கள் தேட ஆரம்பித்தோம். கோபாலகிருஷ்ணன் 25.4.2021 தேதி 1 மணிக்குள் எனக்கு போன் செய்தார். போன் செய்தவர் எனது மாமாவை கண்டு பிடித்து அழைத்து வந்து சிவபெருமான்பாளையத்தில் வைத்து அடிப்பததாக சொன்னார். அய்யப்பனை எங்கு வைத்து அடித்ததாகவும். அப்போது மறிக்க சென்ற தன்னை எதிரிகள் தாக்க வந்ததாகவும், கோபாலகிருஷ்ணனை விசாரித்தேனா என்றால் அது சம்மந்தமாக அவரை நான் விசாரிக்கவில்லை. நான் சிவபெருமான்பாளையம் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 1 1/2 மணிக்குள் சென்று இருப்பேன். நான் சென்றபோது ரத்தக்காயத்தோடு ஜட்டியோடு எனது மாமா தண்ணீர் டேங்க் கீழே கிடந்தார்.அது ஓவர்ஏட் டேங்க் என்றால் சரிதான். நான் சென்றவுடனேயே எனது மாமாவை சிகிச்சைக்கு அழைத்து செல்ல அனுமதிக்க கேட்டேன். சம்பவ இடத்திற்கு நான் சென்ற போது அங்கு 2ம் எதிரி சரவணனை தான் பார்த்தேன். எதிரிகளை பார்த்தேன். அங்கு கோபாலகிருஷ்ணன், பிரியா இருந்தார்கள். நிறைய பேர் இருந்தார்கள். யார் யார் என்று தெரியவில்லை. எதிரிகள் என்னை எதுவும் தவறான வார்த்தை சொல்லி திட்டவில்லை. அய்யப்பனை திட்டினார்கள். 4ம் எதிரி அய்யப்பனின் தலையில் பின்புறம் மண் அள்ளி வைத்துவிட்டார். சம்பவத்திற்கு பிறகு நதியா எப்போது வந்தார் என்றால் என்னால் நேரம் குறிப்பாக சொல்லமுடியாது. அவரது தாயார் வீடான பண்டசோழநல்லுரில் இருந்து வந்தார். ஆம்புலன்ஸிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்று தெரியவில்லை. காவல்நிலையத்திற்கும் யார் தகவல் சொன்னார் என்றும் தெரியவில்லை. 3 மணிக்குள் விக்கரவாண்டி காவல்துறையினரும் , ஆம்புலன்ஸ்ம், சிவபெருமான்பாளையத்திற்கு வந்துவிட்டார்கள். வந்தவர்கள் யார் என்று தெரியவில்லை. நதியா தான் அய்யப்பனை மருத்துவமனையில் சேர்த்தார். மருத்துவமனையில் இருந்த மருதததுவமனை வளாக காவலரிடமே நாங்கள் புகார் அளித்தோம். அவரே புகாரை பெற்றுக்கொண்டார். அவர்

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். என்னிடம் பதிவு செய்துகொண்டார். அதன் பிறகு யாரிடம் விசாரித்தார்கள் என்று தெரியாது. மறுநாள் சிவபெருமான்பாளையத்திற்கு வந்து காவல்துறையினர் விசாரித்தார்கள். என்னை யார் விசாரித்தார்கள் என்று தெரியாது. என்ன பதவியில் இருந்தார்கள் என்று தெரியாது. அப்போது என்ன நேரம் இருக்கும் என்று எனக்கு தெரியாது. நான் சொல்ல சொல்ல கைப்பட எழுதிக்கொண்டார்கள். என்னுடன் பிரியா, நதியா, கோபாலகிருஷ்ணன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டார்கள். எத்தனை மணிக்கு விசாரணை முடித்தார்கள் என்றால் மதியத்திற்குள் விசாரணை முடித்துவிட்டார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. முதல் விசாரணையில் சொன்னதை தான் நான் போலீசார் விசாரித்த போதும் கூறியுள்ளேன். சிவபெருமான்பாளையத்தில் இருந்து பக்கிரிபாளையம் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். கன்னியப்பன் காவலர் சிவபெருமான்பாளையத்திற்கு வந்தாரா என்று எனக்கு தெரியாது. ஆனால் அவரை எனக்கு நன்றாக தெரியும். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் அய்யப்பன் அடிப்படவில்லை என்றால் சரியல்ல. 22.4.2021 தேதி சம்பவத்திற்கு பிறகு காணாமல் போனதாக சொல்லும் அய்யப்பன் புதுவை மாநிலம் திருக்கனூர் எல்லையில் அடிப்பட்டு கிடந்தவரை அந்த காயங்களை பயன்படுத்தி ஏற்கனவே அய்யப்பன் 2ம் எதிரி மனைவியை தாக்கி காயம் ஏற்படுத்திய வழக்கு விக்கரவாண்டி காவல்நிலையத்தில் நிலுவையில் இருந்ததால் அதற்கு பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் அய்யப்பன் விக்கிரவாண்டி காவல்நிலையத்தின் எல்லைக்குட்பட்ட சிவபெருமான்பாளையத்தில் அடிப்பட்டார் என்று அய்யப்பனின் சித்தி மகன் காவலர் கன்னியப்பன் விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் இது போன்ற பொய் புகாரை ஜோடித்து எதிரிகள் மீது பொய்யாக புனையப்பட்ட பொய் புகாரை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் சொல்வதுபோல் என் முன்பு சிவபெருமான்பாளையத்தில் அய்யப்பன் எதிரிகளால் தாக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

15.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.375/2021

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளையராஜா | | |
| த/பெ | கிருஷ்ணன் | மதம் | |
| கிராமம் | திருபுவனை | தொழில் | |
| தாலுக்கா | மண்ணாடிப்பட்டு கொம்யூன் | வயது | 33/2023 |
| மாவட்டம் | புதுவை மாநிலம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் திருபுவனையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பனை எனக்கு தெரியும். இந்த வழக்கில் அ.சா.1 நதியா, அ.சா.2 கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். அய்யப்பன் இறந்து 2021 ஆண்டு ஏப்ரல் மாதம் 20 தேதிக்கு பின்பு இறந்துவிட்டார். இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பன் என்பவருக்கும் அவரது பங்காளி 2ம் எதிரி சரவணன் என்பவருக்கும் சண்டை. அந்த சண்டையில் அய்யப்பன் சரணவனின் மனைவியை அடித்துவிட்டார். இதனால் அய்யப்பனுக்கும் அவரது மனைவி நதியாவிற்கும் சண்டை வந்தது. அப்போது சரவணன் அவரது மனைவியை அடித்துவிட்டது சம்மந்தமாக விக்கிரவாண்டி காவல்நிலையத்தீல் புகார் கொடுத்தது தெரிந்து அய்யப்பன் பயந்து வீட்டை விட்டு ஓடிவிட்டார். 1வது எதிரி சரத்குமார் என் அம்மாவை அடித்தவனை எப்போது ஆனாலும் வெட்டிவிடுவேன் என்று அய்யப்பன் வீட்டிற்கு சென்று மிரட்டியதால் அய்யப்பனின் மனைவி நதியா பயந்து கொண்டு அவரது தாய் வீடு சென்றுவிட்டார். அதன்பிறகு 2, 3 நாட்கள் கழித்து அய்யப்பன் திருக்கனூர் ஏரிக்கரையில் இருக்கும் விபரம் தெரியவந்து 1,2 எதிரிகள் திருக்கனூர் சென்று மோட்டார்

சைக்கிளில் அய்யப்பனை உட்கார வைத்து ஊருக்கு அழைத்து வந்தனர். அப்போது முதலில் அவர்கள் ஊர் எல்லையிலும் பிறகு இறுதியாக தண்ணீர் டேங்க் அழைத்துவந்து கட்டிப்போட்டு அவரை அடித்தார்கள். அவ்வாறு அடித்ததாக இறந்தவரின் அக்கா பெண் பிரியா என்பவர் தொலைபேசி மூலம் எனக்கு தகவல் கொடுத்து சொன்னார். அவர் தகவல் கொடுத்து நான் சொன்ன விபரங்களை என்னிடம் சொன்னார். அதன் பிறகு அன்று சுமார் 3 மணிக்கு நான் அங்கு சென்றேன். நான் போகும்போது அய்யப்பன் ஜட்டியோடு உடல் முழுவதும் ரத்தத்துடன் விழுந்துகிடந்தார். அப்போது அய்யப்பனின் தம்பி கன்னியப்பன் என்பவர் அங்கு இருந்தார் அவரை காப்பாற்ற மாட்டீர்களா என்று நான் கேட்டேன். அதற்கு அவர் என்னை விடவில்லை எதிரிகள் என்னையும் அடிக்க வருகிறார்கள் என்று சொன்னார். அதன் பிறகு நான் அய்யப்பனை தூக்கும்போது எதிரிகள் அப்படி விடமுடியாது என்றும், என் அம்மா மருத்துவமனையில் சாககிடக்கிறார் என்றும், எனவே பத்திரத்தில் கையொப்பம் போட்டுவிட்டு அவரை தூக்குங்கள் என்றும் 1ம் எதிரி சரத் என்னிடம் சொன்னார். அப்போது நான் பரவாயில்லை நானே சிகிச்சை முடிந்து அவரை காவல்நிலையத்தில் ஒப்படைக்கிறேன் என்று சொன்னபோது 4ம் எதிரி உனது அம்மாவிற்கு இப்படி நடந்தால் சும்மா இருப்பாயா என்று கூறி மணலை அள்ளி அவரது தலையில் காயம்பட்டு ரத்தம் வந்த இடத்தில் கொட்டினார் என்றும், அதன் பிறகு காவல்துறையினர் அதையெல்லாம் செய்யக்கூடாது என்று கூறி தடுத்தார்கள். அதன் பிறகு 108 ஆம்புலன்ஸை வரவழைத்து அய்யப்பனை நாங்கள் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்து அவர் இரவு 1.30 மணிக்கு மேல் இறந்துவிட்டததாக நான் வீட்டில் இருந்தபோது எனக்கு தகவல் வந்தது. இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சிவபெருமான்பாளையம் திருபுவனை எனது சொந்த ஊர் என்றால் சரிதான். அது சம்பவம் நடந்த ஊரில் இருந்து 10 முதல் 12 கி.மீ வரை இருக்கும். அய்யப்பன் எனக்கு சகலை உறவுமுறை ஆவார். கன்னியப்பன் எனக்கு சகலை உறவுமுறை ஆவார். கன்னியப்பன் இறந்தபோன அய்யப்பனுக்கு பெரியம்மா மகன் ஆவார். அவர் தமிழ்நாடு காவல்துறையில் வானூர் காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறார் என்றால்

சரிதான். 2ம் எதிரி சரவணனின் மனைவியை இறந்துபோன அய்யப்பன் அடித்தது எப்போது என்றால் வழக்கு சம்பவம் நடப்பதற்கு 3 அல்லது 4 நாட்களுக்கு முன்பு அடித்தார். சரவணன் மனைவி தாக்கப்பட்டதற்கு பின்பு அய்யப்பனுக்கும் அவரது மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்வது எப்போது என்றால் சரவணன் மனைவி தாக்கப்பட்டதற்கு பின்பு அன்றே பிரச்சனை ஏற்பட்டது. நதியா அன்றே ஊருக்கு போய்விட்டாரா என்றால் எனக்கு தெரியாது. சரவணன் மனைவிக்கும் அய்யப்பனுக்கும் நடந்த முதல் சம்பவம் பற்றி எனக்கு நதியா சொன்னார். அவர் வழக்கு சம்பவம் நடந்ததற்கு 3 நாட்களுக்கு முன்பு சொன்னார். அன்று நதியா சிவபெருமான்பாளையத்தில் இருந்து தான் தகவல் சொல்வதாக சொன்னார். சரவணன் மனைவி தாக்கப்பட்டதாக சொல்லும் தேதியிலேயே அய்யப்பன் குடும்பத்திற்கும் சரவணன் குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றால் சரிதான். இந்த பிரச்சனை சம்மந்தமாக நதியா வீட்டில் இருந்து எதிரிகள் மீது புகார் எதாவது அளிக்கப்பட்டதா என்று விசாரித்தேனா என்றால் அது குறித்து விசாரிக்கவில்லை. 2 குடும்பத்திற்கும் பிரச்சனை உள்ள நிலையில் சிவபெருமான்பாளையத்திற்கு வர முயற்சி செய்தேனா என்றால் இல்லை. முதல் சம்பவ தேதியன்றே அய்யப்பன் வீட்டை விட்டு சென்றுவிட்டார். நதியா சிவபெருமான்பாளையத்தில் சம்பவத்திற்கு பிறகு எத்தனை நாட்கள் இருந்தார் என்றால் அன்று ஒரு நாள் மட்டும் தான் இருந்தார். அதன் பிறகு அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார். 2 சம்பவம் குறித்தும் பிரியா எனக்கு போன் செய்தார். இந்த வழக்கு சம்பவத்திற்கு 3 நாட்கள் முன்பு நடந்த சம்பவத்தை எனக்கு முதல் சம்பவம் நடந்ததாக சொல்லும் 2ம் நாள் சொன்னார். இந்த வழக்கு சம்பவம் குறித்து சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் 11 அல்லது 12 மணிக்கு சொன்னார். நான் கேள்விப்பட்டு நான் வேறு யாருக்கும் சொல்லவில்லை. திருக்கனுரில் இருந்து அய்யப்பனை எதிரிகள் அழைத்து வந்ததாக பிரியா தான் சொன்னார். பிரியா வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலும் இடத்திலும் இருந்து தான் எனக்கு சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு 2 அல்லது 3 மணிக்கு வந்துவிட்டேன். நான் வருவதற்கு முன்பு கன்னியப்பன் அங்கு இருந்தார். அப்போது எனக்கு முன்பே அவர் வந்துவிட்டார் என்றால் ஆமாம். கன்னியப்பனுக்கு எப்படி தகவல் தெரிந்தது என்று நான்

விசாரித்தேனா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு அய்யப்பனை மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து சென்றேன் என்றால் நானும், எனது அத்தை மற்றும் முத்துகிருஷ்ணன் ஆகியோர் மாலை 4 அல்லது 5 மணிக்கு அவரை மருத்துவமனை அழைத்து சென்றோம். அப்போது கன்னியப்பன் என்னுடன் வரவில்லை. முதலில் ஊர் எல்லையிலும், பிறகு வாட்டர் டேங்க் அருகிலும் கட்டிப்போட்டு அடித்தார்கள் என்ற விபரத்தை என்னிடம் பிரியா தான் சொன்னார். ஊர் எல்லையில் அடித்தது குறித்து நேரம் நான் கேட்டேனா என்றால் இல்லை. நான் நேரத்தை பற்றியே விசாரிக்கவில்லை. 3மணிக்கு அய்யப்பன் ஜட்டியுடனும், ரத்தத்துடனும் வாட்டர் டேங்க் அருகில் தான் விழுந்து கிடந்தார். நான் வந்ததிற்கு பிறகு சம்மந்தப்பட்ட விக்கிரவாண்டி காவல்துறைக்கு தகவல் எதாவது கொடுத்தாயா என்று கன்னியப்பனை கேட்டேனா என்றால் கேட்டேன். அவர் தகவல் கொடுத்ததாக சொன்னார். கன்னியப்பன் தகவல் சொல்லி சம்பவ இடத்தில் அங்கு காவல்துறையை சார்ந்த யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. நான் சென்ற பிறகு 10 நிமிடம் கழித்து விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் இருந்து ஒரு காவலர் வந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை சம்பவம் நடந்த மறுநாள் மருத்துவமனையில் என்னை உதவி ஆய்வாளர் அதிகாலை 2 மணிக்கு விசாரித்தார்கள். அதன் பிறகு யாரும் என்னை விசாரிக்கவில்லை. முதல் விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணை குறித்த விபரங்களை நான் அவரிடம் சொல்லவில்லை. பத்திரத்தில் கையொப்பம் போட்டுகொடுத்துவிட்டு அய்யப்பனை சிகிச்சைக்கு அழைத்து செல்லுங்கள் என்று எதிரி என்னிடம் தெரிவித்த விபரத்தை நான் என்னை விசாரித்த காவல் அதிகாரிடம் சொன்னேன். 4ம் எதிரி அய்யப்பனுக்கு தலையில் காயம்பட்ட இடத்தில் மண்ணை அள்ளி வைத்துவிட்டார் என்ற விபரத்தையும் நான் காவல்துறை விசாரணையில் சொன்னேன். ஆம்புலன்ஸிற்கு கன்னியப்பன் தான் தகவல் கொடுத்தார். நான் வருவதற்கு முன்பே ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அய்யப்பன் தலைமறைவான போது திருக்கனூரில் எதோ ஒரு இடத்தில் அடிப்பட்டுவிட்டார் என்றும், அந்த காயங்களை வைத்து எதிரிகளுக்கு எதிராக இது போன்ற பொய் புகாரை ஜோடித்தவரே கன்னியப்பன் என்றால் சரியல்ல. எனக்கு பிரியா சம்பவம் பற்றி சொன்னதாக சொல்வது தவறு என்றால்

சரியல்ல. நான் உறவுக்காரர் என்பதால் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிப்பேன் என்ற நோக்கத்தில் என்னை சாட்சியாக இணைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இருவரும் எனக்கு உறவினர்கள் தான். இதற்கு முன்பு சாட்சி சொன்ன பிரகாஷ் என்பவர் அய்யப்பன் என்பவரின் சொந்த அத்தை மகன் என்றால் உறவினர் தான். தூரத்து சொந்தம். நான் சொன்ன விசயங்கள் அனைத்தும் காவலர் ஆவணங்களை பரிசிலித்து பார்த்து எனக்கு சொல்லிக்கொடுத்த விபரங்களை வைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சிவபெருமான்பாளையத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடை பெறவில்லை என்றால் சரியல்ல. புதுவை திருக்கனூர் எல்லையில் அடிப்பட்ட அய்யப்பனை விக்கிரவாண்டி காவல்நிலையத்தின் எல்லைக்குட் பட்ட சிவபெருமான்பாயைத்தில் அடிப்பட்டதாக புகார் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே சிவபெருமான்பாளையத்தில் சம்பவம் நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.375/2021

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரகாஷ் | | |
| த/பெ | குமாரசாமி | மதம் | |
| கிராமம் | சிவபெருமான்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 35/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் சிவபெருமான்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பனை எனக்கு தெரியும். இந்த வழக்கில் அ.சா.1 நதியா, அ.சா.2 கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். அய்யப்பன் இறந்து 1 அல்லது 1 1/2 வருடம் இருக்கும். அவர் இறப்பதற்கு முன்பு யார் யாருக்கிடையில் சண்டை நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் அப்போது வேலைக்கு போயிருந்தேன். எனக்கு சம்பவம் குறித்து மறுநாள் தான் அவர் இறந்துவிட்டார் என்று தெரியும். என்னுடன் வேலை செய்தவர்கள் 7 பேர் காவல்நிலையத்திற்கு சென்று வழக்கு சம்மந்தமாக கையெழுத்து போட வேண்டும் என்று சொன்னார்கள். காவல்நிலையத்தில் ஒவ்வொருவரும் கையெழுத்து செய்தோம். அவர்கள் விசாரணை செய்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை. (சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 22.4.2021 எங்கள் ஊரை சேர்ந்த சரவணனுக்கும் அய்யப்பனுக்கும்

சண்டை நடந்தது என்றும், அப்போது சரவணன் மனைவி விஜயகுமாரி காயம் ஏற்பட்டு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றும், அதன் பிறகு அய்யப்பனுக்கும் அவரது மனைவி நதியாவிற்கு சண்டை ஏற்பட்டு அவரது சொந்த ஊரான பண்டசோழநல்லுருக்கு சென்றுவிட்டார் என்றும், பயந்துபோன அய்யப்பன் வீட்டை விட்டு சென்றுவிட்டார் என்றும், இந்நிலையில் கடந்த 25.4.2021 தேதி அய்யப்பன் திருக்கனூர் ஏரிக்கரையில் இருப்பது தெரிந்து எதிரிகள் சரத்குமார் மற்றும் சரவணன் ஆகியோர் 12மணியளவில் PY05 H1570 என்ற இருசக்கர வாகனத்தில் சென்று அய்யப்பனை அழைத்து வந்து எங்கள் ஊர் முணியம்மாள் வீடு கட்டும் ரோட்டின் அருகீல் வைதது அய்யப்பனை அசிங்கமாக திட்டி, மரக்கட்டில் கால் கட்டையால் அடித்தார் என்றும், அப்போது அய்யப்பனின் அலறல் சத்தம் கேட்டு அங்கு வந்த அய்யப்பனின் மனைவி நதியா பார்த்தபோது மீண்டும் சரத்குமார் அய்யப்பனின் பின்பக்க தலை மற்றும் உடல் முழுவதும் அடித்தார் என்றும், அப்போது 1ம் எதிரி சரவணன் என் மனைவியை அடிப்பாயா என்று அசிங்கமாக பேசி இரும்பு ஸ்பேனரால் முகவாய் கட்டை, வலது உள்ளங்கை ஆகிய இடங்களில் அடித்தார் என்றும், நதியா தடுக்க சென்றபோது 3,4 எதிரிகள் குமரவேல் மற்றும் ஜானகி இருவரும் அய்யப்பனை நெருங்கவிடாமல் தடுத்தும், எங்கடா ஓடுகிறாய் என்று, பழனி என்பவரின் வீட்டிற்கு பின்புறம் உள்ள இடத்தில் பிடித்து கீழே தள்ளி குமரவேல் என்பவர் தான் வைத்திருந்த தடியால் சராமரியாக அடித்தார் என்றும், கையாலும், காலாலும் அய்யப்பனை அடித்தார் என்றும், அங்கு இருந்தவர்கள் சத்தம் போடவே மேற்படி எதிரிகள் பிள்ளையார்கோவில் வாட்டர் டேங் அருகில் அய்யப்பனை அழைத்து வந்து மீண்டும் அடித்தார்கள் என்றும், அய்யப்பனின் அலறல் சத்தம் கேட்டு நானும், அய்யப்பனின் மனைவி நதியா மற்றும் கோபாலகிருஷ்ணன் மற்றும் பலர் அங்கு வந்து அவரை தூக்கி பார்த்தோம் என்றும் அப்போது எதிரிகள் அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும், 108 ஆம்புலன்ஸிற்கு நாங்கள் போன் செய்து உயிர் காக்கும் சிகிச்சைக்காக மருததுவமனையில் அனுமதித்தோம் என்றும், ஆனால் சிகிச்சை பலன் அளிக்காமல் 26.4.2021 தேதி அதிகாலை 1 மணியளவில் (அன்றிரவு) இறந்துவிட்டார் என்றும், அய்யப்பனின் பிரேதத்தை பார்த்தேன் என்றும்,

ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், சொல்லிவிட்டு, அவர்கள் கேட்டுக்கொண்டார்கள் என்பதற்காக அவர்களை காப்பாற்றும் நோக்கத்தோடு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை தெரிவிக்கப்பட்டது.</u>**